www.padippakam.com



# யாழ்ப்பாணத்தில் அடைக்கலம் வைக்கப்பட்ட கண்டிய சிங்கள இளவரசி

28

## காக்கை வன்னியன் முதல் கதிர்காமர் வரை...

தொடர்கின்ற வரலாற்று மோசடிகளும் துரோகங்களும்

### வரலாற்றுத் தொடர்

சங்கிலி செகராசசேகரனிடம் தோற்றுப் போய் கோவாவுக்குத் திரும்பிய போர்த்துக்கேயரிடம் சிக்கியிருந்த புத்தரின் புனிதப் பல்லை மீட்பதற்கு பர்மா தேசத்து அரசன் ஐந்து இலட்சம் பொன் கொடுப்பதாக பேரம் பேசினான். எப்போதும் பணம் ஈட்டுவதில் குறியாக இருந்த தளபதி பிறகன்சா அதை அவனுக்குக் கொடுக்க விரும்பினாலும் கோவாவிலிருந்த கிறிஸ்தவ மதகுருமார் அனுமதி மறுத்தது மட்டுமல்லாமல், அதை மக்கள் முன்னிலையில் அரைத்துத் தூளாக்கி எரியும் நெருப்பில் போட்டுவிட்டதாகச் சொல்லப்படுகின்றது.

ஆனால் பவுல் பீரிஸ் எனும் வரலாற்றாசிரியர் போர்த்துக்கேயர் சங்கிலியனிடம் இருந்து கைப்பற்றிச் சென்ற இந்தத் தாது புத்தரின் உண்மையான தாது அல்ல. உண்மையானதைப் போல செய்யப்பட்ட போலித் தாது என்று கூறியுள்ளார்.

சங்கிலியனிடம் தோல்வியடைந்து அவமானப்பட்டுத் திரும்பிய போர்த்துக்கேயத் தளபதி பிறகன்சா விழுந்தும் மீசையில் மண் ஒட்டவில்லை என்ற கதையாக மீண்டும் மன்னாருக்குப் படையெடுத்துச் சென்று அங்கே கோட்டை ஒன்றைக் கட்ட முற்பட்டான். அக் காலத்தில் மன்னாரையும் மாதோட்டத்தையும் ஆண்ட மகதன் என்னும் சிற்றரசன் மூவாயிரம் படையினரோடும் இரண்டு பீரங்கிகளோடும், சில துப்பாக்கிகளோடும் பிறகசனாவையும் அவனது படைகளையும் தரையிறங்கவிடாமல் தடுத்தாலும், போர்த்துக்கேயரின் பீரங்கிகளின் பலத்திற்கு முன்னால் அவனால் ஒன்றும் செய்யமுடியவில்லை. இறுதியில் மகதனும் அவனது படைகளும் தோற்றுப் போக மன்னாரையும் மாதோட்டத்தையும் கைப்பற்றிய பிறகன்சா புகழ்பெற்ற திருக்கேதீஸ்வரம் கோவிலை இடித்துத் தரைமட்டமாக்கி அந்தக் கற்களைக் கொண்டு கோட்டை ஒன்றைக் கட்டி அங்கே தனது படைகளை நிறுத்திவிட்டு தனது நாட்டிற்குத் திரும்பினான்.

**சங்கிலி செகராஜசேகரனால் தமக்கு தொடர்ந்து தொல்லை விளைவதை கண்ட போர்த்துக்கேயர்கள் அவனை வீழ்த்துவதற்கு ஒரு புதிய வழியைக் கையாண்டார்கள். அதாவது அவனது எதிரியான பரநிருபசிங்கன் மூலமும் ஏற்கனவே யாழ்ப்பாணத்தில் கிறித்தவ மதத்தில் மாறியவர்கள் மூலமாகவும் சங்கிலியனுக்கு எதிராக கிளர்ச்சி செய்யும்படி தூண்டினார்கள்.**

இந்தச் சம்பவங்களைக் கேள்வியுற்ற சங்கிலி ஒரு படையுடன் வந்து அந்தக் கோட்டையைக் கைப்பற்றி அழிக்க முயன்றான். ஆனால் அவனால் அது முடியவில்லை. அதன் பின் மீண்டும் கி.பி.1563 இல் ராமன் எனும் படைத்தலைவனின் தலைமையில் ஒரு படையெடுப்பு நடந்தது. அதுவும் தோல்வியில் முடிவடைந்தது.

சங்கிலி செகராஜசேகரனால் தமக்கு தொடர்ந்து தொல்லை விளைவதை கண்ட போர்த்துக்கேயர்கள் அவனை வீழ்த்துவதற்கு ஒரு புதிய வழியைக் கையாண்டார்கள். அதாவது அவனது எதிரியான பரநிருப சிங்கன் மூலமும் ஏற்கனவே யாழ்ப்பாணத்தில் கிறித்தவ மதத்தில் மாறியவர்கள் மூலமாகவும் சங்கிலியனுக்கு எதிராக கிளர்ச்சி செய்யும்படி தூண்டினார்கள்.

ஏற்கனவே யாழ்ப்பாணத்தில் இருந்த அரச குடும்ப சண்டையாலும், அரச பரிபாலகர்களது தவறான நடவடிக்கைகளாலும் வெறுப்புற்றிருந்த மக்கள் சங்கிலியனுக்கு எதிராகக் கிளர்ச்சி செய்யத் தொடங்கினார்கள். இந்தக் கிளர்ச்சி கி.பி .1563-க்கும் 1564-க்கும் இடையில் நடைபெற்றதாக நம்பப்படுகின்றது.



இதனால் நாடெங்கும் நிலைமை கட்டுக்கடங்காமல் போக சங்கிலி பதவி விலகி தனது வைப்பாட்டி மகனான புவிராச பண்டாரத்தை அரசனாக்கினான். (பட்டத்து இளவரசன் ஏற்கனவே போர்த்துக்கேயர்கள் சிறைப்பிடித்துச் சென்றுவிட்டனர்.) புவிராச பண்டாரம் அரசியலில் விவேகமற்றவனாக இருந்தபடியால் சங்கிலியே திரை மறைவிலிருந்து அரசியலை நடாத்தி வந்தான்.

கி.பி.1565-ல் சங்கிலி நோயினால் இறக்க காசி நயினார் அல்லது குஞ்சி நயினார் என்ற அரச குமாரன் புவிராச பண்டாரத்தை நீக்கி விட்டு பரராசசேகரன் என்ற பெயருடன் அரசனனான். தங்களின் கிளர்ச்சியால் அரசமைக்கப்பட்ட புவிராச பண்டாரத்துக்கு இராச்சியமில்லாது போனதைக் கண்ட பரநிருப சிங்கனின் ஆட்களும் கிறிஸ்தவர்களும் அப்போது மன்னாரிலிருந்த போர்துக்கேயத் தளபதி ஜோர்ச் மெலா து காஸ்திறோ (Jorge de melo de castro) வைத் தமக்கு உதவி செய்யும்படி வேண்டினார்கள். யாழ்ப்பாண இராச்சியத்திற்குள் தலையிடுவதற்கு இது ஓர் நல்ல தருணம் என எண்ணிய காஸ்திறோ யாழ்ப்பாணத்துக்குப் படையெடுத்துச் சென்று காசிநயினாரை பிடித்து சிறையிலடைத்து விட்டு, வேறோர் அரச குமாரனை அரசனாக்கி விட்டு மன்னாருக்குத் திரும்பினான்.

அவன் யாழ்ப்பாணத்தை விட்டு சென்றதும் காசி நயினாருக்கு ஆதரவான படைத்தளபதிகள் புதிய அரசனைக் கொன்று விட்டு காசி நயினாரை சிறையிலிருந்து மீட்டு மீண்டும் அரசனாக்கினார்கள்.

இதை அறிந்து பெருங்கோபம் கொண்ட போர்த்துக்கேயத் தளபதி காஸ்திறோ தனக்கு பெருத்த அவமானத்தைத் தேடித்தந்த காசிநயினாரை தந்திரமாக அழித்துவிடத் தீர்மானித்தான். அதற்காக அரண்மனைச் சேவகன் ஒருவனுக்கு இலஞ்சம் கொடுத்து அவன் மூலமாக உணவில் நஞ்சு கலந்து காசிநயினாரை கொல்லவும் செய்தான்.

காசி நயினார் கொல்லப்பட்டதும் அங்கிருந்த தமது சார்பாளர்களின் அழைப்பின் பேரில் யாழ்ப்பாணம் சென்ற காஸ்ரோ பெரியபிள்ளை என்னும் அரசகுமாரனை கி.பி.1570-ல் செகராசசேகரன் என்னும் பட்டத்துடன் யாழ்ப்பாண அரசனாக்கினான்.

பெரியபிள்ளை சிறிதுகாலம் போர்துக்கேயரது விசுவாசியாக இருந்தாலும் நாளாக நாளாக நாட்டைக் கொள்ளையடிப்பதை நோக்கமாகக் கொண்ட அவர்களது பேராசையால் வெறுப்புற்று அவர்களை எதிர்க்கத் தலைப்பட்டான். அதற்காக தஞ்சாவூர் நாயக்க அரசனிடம் படை உதவி பெற்றுக் கொண்டு மன்னாருக்குப் படையெடுத்துச் சென்றான். ஆனால் அந்த முயற்சி வெற்றியளிக்கவில்லை. போர்த்துக்கேயருக்கு தங்களால் அரசனாக்கப்பட்டவன் தங்கள் மீது படையெடுத்து வந்தது கடும் சினத்தைத் தந்தாலும் பெரிய பிள்ளைக்கு தஞ்சைப் படைகளின் பாதுகாப்பு இருந்த படியால் உடனடியாக யாழ்ப்பாணத்துக்குப் படையெடுத்துச் செல்ல அவர்கள் விரும்பவில்லை.

கி.பி.1582-ல் பெரியபிள்ளை இறக்க புவிராச பண்டாரம் என்னும் பெயரையுடைய வேறோர் அரசன் பரராச சேகரன் என்னும் பெயருடன் ஆட்சிக்கு வந்தான். இவனை கூனன் என்று இழிவு செய்த போர்த்துக்கேயர்கள் அரசனாக ஏற்க மறுத்தனர்.

இவன் ஆட்சிப் பொறுப்பை ஏற்ற வருடம் கண்டியை ஆண்ட கறலியத்தை பண்டார என்னும் அரசன் மீது சீதாவாக்கை அரசனான இராஜசிங்கன் படையெடுக்க தோல்வியடைந்த கண்டியரசன் தன் குடும்பத்துடன் திருக்கோணமலைக்கு ஓடி ஒளிந்தான். அங்கே அவனும் அவனது மனைவியும் அம்மை நோய் வந்திறந்தனர். அதற்குமுன் தன் ஒரே மகளை தன் மருமகன் முறையாயுள்ள யம சிங்கனிடம் ஒப்படைத்து அவளைப் பாதுகாத்து அவள் பெரியவளானதும் மணந்து கொள்ளும்படி வேண்டினான். அதற்கு உடன்பட்ட யமசிங்கன் யாழ்ப்பாணம் சென்று அவளை புவிராஜ பண்டாரத்திடம் ஒப்படைத்து விட்டு கோவாவிற்குச் சென்று விட்டான். பின்னர் இந்தப் பெண் மன்னாரிலுள்ள போர்த்துக்கேயரிடம் கொடுக்கப்பட்டாள். இவளே பின்னாளில் தொன் சுவாம் விமலதர்ம சூரியன் என்ற கண்டி அரசனின் மனைவியானாள்.

மன்னார் போர்த்துக்கேயர் வசமான காலத்தில் இருந்து அதை மீட்க வேண்டுமென்ற எண்ணம் யாழ்ப்பாணத்து அரசர்கள் எல்லோருக்கும் இருந்ததைப் போலவே புவிராச பண்டாரத்திற்கும் இருந்தது. அதற்கென அவன் மூன்று வருடங்களாக வேண்டிய ஆயுதங்களைச் செய்து கொண்டு 65 மரக்கலங்களோடும் கோட்டையை உடைப்பதற்குரிய பீரங்கிகளோடும் மன்னாருக்குப் படையெடுத்துச் சென்றான்.

- நக்கீரன்